பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 03 2026 SUNDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் **23**-ஆம் தேதி நடைபெறும் என்றும், வாக்கு எண்ணிக்கை மே மாதம் **4**-ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**2)** தமிழகத்தில் சமையல் எரிவாயு பற்றாக்குறை நிலவுவதாக கூறி திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் இன்று மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

**3)** சமையல் எரிவாயு தட்டுப்பாடு இருப்பதாக திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் வதந்தி பரப்புவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

**4)** நீலகிரி, கன்னியாகுமரி உள்பட நான்கு மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்றும், நாளையும் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** **19** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக **Futures** கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியா ஒரு தங்கம் **3** வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 23-ஆம் தேதி நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** அறிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, தேர்தல் அட்டவணையை அவர் வெளியிட்டார்.

இதன்படி, வேட்புமனு தாக்கல் வரும் 30-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 6-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அவர் கூறினார்.

அதற்கு மறுநாள் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள 9-ஆம் தேதி கடைசிநாளாகும் என்றும் அவர் கூறினார்.

வாக்கு எண்ணிக்கை மே மாதம் 4-ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

அஸ்ஸாம், கேரளா மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாதம் 9-ஆம் தேதியும், மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 23 மற்றும் 29-ஆம் தேதிகளிலும் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இதற்கான வாக்கு எண்ணிக்கையும் மே மாதம் **4**-ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் திரு **Gyanesh Kumar** அறிவித்தார்.

இந்த தேர்தல்கள் நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை உயரதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை மேற்கொண்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த தேர்தலில் வாக்குப்பதிவின்போது வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்கு செல்வதற்குமுன் மொபைல் போன்களை ஒப்படைப்பதற்கான வசதியும் ஏற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளும் வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான வசதியும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து நடத்தை நெறிமுறைகள் உடனடியாக செயல்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் நடத்தை நெறிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

அரசியல் கட்சிகளின் தேர்தல் செலவினங்களை அதற்கான பார்வையாளர்கள் கண்காணிப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

அரசியல் கட்சிகளின் சமூக வலைதளங்களும் கண்காணிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த தேர்தலில் **30** புதிய முன்னெடுப்புகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனை வாக்குப்பதிவின் போது வாக்காளர்கள் உணர முடியும் என்றும் திரு **Gyanesh Kumar** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் பெட்ரோலியப் பொருட்களின் விநியோகம் சீராக உள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் கூறியுள்ளன.

பொதுமக்கள் இதுகுறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், தேவையில்லாமல் முன்பதிவு செய்ய வேண்டாம் என்றும் ஐ ஓ சி கேட்டுகொண்டுள்ளது.

இதற்கிடையே, சமையல் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறை இல்லை என்றும், விநியோகம் சீராக உள்ளதாகவும் சென்னையை சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

***(Sound Byte — பொதுமக்கள் - 48 Sec. )***

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு நிலவுவதாக கூறி, திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் இன்று மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதில், திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>>>

இதற்கிடையே, சமையல் எரிவாயு தட்டுப்பாடு என்று திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் பொய் பிரச்சாரம் செய்வதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசு மீது பழி சுமத்தவும், தேர்தல் வாக்குறுதியான சிலிண்டருக்கு 100 ரூபாய் குறைப்போம் என்பதை மறக்கடிக்க செய்யும் வகையிலும் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக திமுக இந்த போராட்டத்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களை அச்சுறுத்தும் வகையில் இதுபோன்ற செய்திகளை பரப்புவது ஏற்புடையது அல்ல என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>>

தமிழகத்தின் வளர்ச்சியை தேசிய ஜனநாயக கூட்டணி உறுதி செய்யும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய இணையமைச்சருமான திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

குறிப்பாக, திமுக வாரிசு அரசியலுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் திரு அர்ஜுன் ராம் மெக்வால் குறை கூறினார்.

<<<<<<>>>>>>>

திமுக கூட்டணியில் இழுபறிகள் எதுவும் இல்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகம் கூறியுள்ளார்.

இன்று காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணி பேச்சுவார்த்தைகள் அடுத்த சில தினங்களில் நிறைவடையும் என்று கூறினார்.

தங்கள் கூட்ணியில் தேமுதிக இணைந்துள்ளதை வரவேற்பதாகவும் திரு சண்முகம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நீலகிரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும்

மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 45 Sec. )***

<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

விருதுநகர் மாவட்டத்தில் **100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு சுகபுத்ரா இன்று தொடங்கிவைத்தார்.

---------------

நீலகிரி மாவட்டம் உதகையில், பழங்குடியினர் கூட்டமைப்பின் முதல் கூட்டம் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக **Futures** கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியா ஒரு தங்கம் **3** வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் **51** கிலோ எடைப்பிரிவில் **Chandrika Bhoreshi Pujari** தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் **48** கிலோ எடைப்பிரிவில் **Gunjan-**னும், **54** கிலோ எடைப்பிரிவில் **Joyshree Devi Chirom-**மும், ஆடவர் **50** கிலோ எடைப்பிரிவில் **Ambekar Meetei Lairenlakpam-**ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் **57** கிலோ எடைப்பிரிவில் **Radhamani Longjam** வெண்கலப்பதக்கம் வென்றார்.

<<<<<<**END**>>>>>>>